ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

கீதார்த்தசங்கிரகம்

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

கீதார்த்தசங்கிரகம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

கட்டப் பொருள் விரித்த காசினியில் நான் மறையில் ⋆
இட்டப் பொருள் இயம்பும் இன் பொருளைச் ⋆
சிட்டர் தொழும் வேதாந்த தேசிகனை மேவுவார் தங்கள் ⋆
திருப் பாதாம்புயம் அடியேன் பற்று ॥ **1** ॥

கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனார் ⋆
பாதாரவிந்தமலர் பத்தியுடன் பற்று ॥ **2** ॥

‡ கருமமும் ஞானமும் கொண்டெழும் ⋆
காதலுக்கோர் இலக்கென்று ⋆
அரு மறை உச்சியுள் ⋆
ஆதரித்தோதும் அரும் பிரமம் ⋆⋆
திருமகளோடு வரும் ⋆
திருமால் என்று தான் உரைத்தான் ⋆
தருமம் உகந்த தனஞ்சயனுக்கு ⋆
அவன் சாரதியே ॥ **1** ॥

உகவை அடைந்த உறவுடையார் ⋆
பொரலுற்ற அந்நாள் ⋆
தகவுடன் அன்பு கரை புரளத் ⋆

தருமத்தளவில்**
மிக உளம் அஞ்சி விழுந்து*
அடி சேர்ந்த விசயனுக்கோர்*
நகை உடன் உண்மை உரைக்க*
அமைந்தனர் நாரணனே ॥ **2** ॥

உடலம் அழிந்திடும்*
உள் உயிர் ஒன்றழியாதெனைப் போல்*
விடுமது பற்று*
விடாததடைத்த கிரிசைகளே**
கடுக உனக்குயிர் காட்டும் நினைவு*
அதனால் உளதாம்*
விடு மயல் என்று*
விசயனைத் தேற்றினன் வித்தகனே ॥ **3** ॥

சங்கம் தவிர்ந்து*
சகம் சதிர் பெற்ற தனஞ்சயனே*
பொங்கும் குணங்கள் புணர்ப்பனைத்தும்*
புக விட்டவற்றுள்**
நங்கண் உரைத்த கிரிசை எல்லாம்*
எனவும் நவின்றார்*
எங்கும் அறிவர்களே என்று*
நாதன் இயம்பினனே ॥ **4** ॥

பிறவாமை தந்திடத்*
தானே பிறக்கும் பெருமைகளும்*
துறவாக் கிரிசைகள்*
தூய்மதி தன்னால் துலங்குகையும்**

இறவா உயிர் நின்னிலை கண்டிடும் ⋆
உலகின் நிலையும் ⋆
மறைவாழு மாயவன் ⋆
நேயனுக்கன்றறிவித்தனனே ॥ **5** ॥

கண்டெளி தாம் கருமம் ⋆
உயிர் காட்டக் கடுகுதலும் ⋆
மண்டி அதன் படியில் ⋆
மனம் கொள்ளும் வரிசைகளும் ⋆⋆
கண்டறியா உயிரைக் ⋆
காணல் உற்ற நினைவுகளும் ⋆
வண் துவர் ஈசன் இயம்பினன் ⋆
வாசவன் மைந்தனுக்கே ॥ **6** ॥

யோக முயற்சியும் ⋆
யோகில் சம நிலை நால் வகையும் ⋆
யோகின் உபாயமும் ⋆
யோகு தன்னால் வரும் பேறுகளும் ⋆⋆
யோகுதனில் தன் திறமுடை ⋆
யோகுதன் முக்கியமும் ⋆
நாகணை யோகி நவின்றனன் ⋆
நன் முடி வீரனுக்கே ॥ **7** ॥

தான் நின்ற உண்மையைத் ⋆
தன் தனி மாயை மறைத்தமையும் ⋆
தான் அன்றி மாயைதனைத் தவிர்ப்பான் ⋆
விரகற்றமையும் ⋆⋆
மேனின்ற பத்தர்கள் நால்வரில் ⋆

ஞானி தன் மேன்மைகளும் ⋆
தேன் நின்ற செங்கழலான் ⋆
தெளிவித்தனன் பார்த்தனுக்கே ॥ **8** ॥

ஆராத செல்வமும் ⋆
ஆர் உயிர் காணும் அரும் பயனும் ⋆
பேராது தன் கழற்கீழ் ⋆
அமரும் பெரு வாழ்ச்சிகளும் ⋆⋆
சோராதுகந்தவர் ⋆
தூய் மதி கொள்வதும் செய்வனவும் ⋆
தேரா விசயனுக்குத் ⋆
திருநாரணன் செப்பினனே ॥ **9** ॥

தன் மேன்மையும் ⋆
தன் பிறப்பில் தளராத் தனி நிலையும் ⋆
பன் மேனி நண்ணினன் பால் ⋆
பிரியா அன்பர் ஆசைகளும் ⋆⋆
புன் மேனி விண்ணவர் பால் ⋆
புரியாத தன் பத்தியையும் ⋆
நன் மேனி நாரணன் தான் ⋆
நரனுக்கு நவின்றனனே ॥ **10** ॥

எல்லையில்லாத தன் சீலமாம் ⋆
இன்னமுதக் கடலும் ⋆
எல்லையில்லாத விபூதி எல்லாம் ⋆
தனதானமையும் ⋆⋆
எல்லை இல் பத்தி தனை ⋆
எழுவிக்கத் திரு அருளால் ⋆

எல்லை இல் ஈசன் இயம்பினன் ⋆
இந்திரன் மைந்தனுக்கே ॥ **11** ॥

எல்லாம் தனக்குருவாய் இலங்கும் வகை ⋆
தான் உரைத்துச் ⋆
சொல்லால் அறிந்தது ⋆
சோராமல் கண்டிட வேண்டும் என்ற ⋆⋆
வில்லாளனுக்கன்று ⋆
மெய்க் கண் கொடுத்தது வேறும் உண்டோ ⋆
நல்லார்கள் காண்பர் என்று ⋆
நவின்றான் நங்கள் நாயகனே ॥ **12** ॥

தன் கழலில் பத்தி தாழாததும் ⋆
அதன் காரணமாம் ⋆
இன் குண சிந்தையும் ⋆
ஈதறியார்க்கவ்வடிமைகளும் ⋆⋆
தன் கருமங்கள் அறியாதவர்க்கு ⋆
இலகு நிலையும் ⋆
தன் கழல் அன்பர்க்கு ⋆
நல்லவன் சாற்றினன் பார்த்தனுக்கே ॥ **13** ॥

ஊனின் படியும் ⋆
உயிரின் பிரிவும் உயிர் பெறுவார் ⋆
ஞானம் பெறு வகையும் ⋆
ஞானம் ஈன்ற உயிர்ப் பயனும் ⋆⋆
ஊன் நின்றதற்கடியும் ⋆
உயிர் வேறிடும் உள் விரகும் ⋆

தேன் நின்ற பாதன் ⋆
தெளிவித்தனன் சிலைப் பார்த்தனுக்கே ॥ **14** ॥

முக்குணமே உயிர் முற்றவும் கட்டிட ⋆
மூண்டமையும் ⋆
முக்குணமே அனைத்தும் வினை கொள்ள ⋆
முயன்றமையும் ⋆⋆
முக்குண மாயை கடத்தலும் ⋆
முக்கதி தந்தளிப்பும் ⋆
முக்குணம் அற்ற பிரான் ⋆
மொழிந்தான் முடியோன் தனக்கே ॥ **15** ॥

மூ எட்டிலும் ⋆
அதின் மோகம் அடைந்த உயிர்களிலும் ⋆
நா எட்டெழுத்தொடு ⋆
நல் வீடு நண்ணின நம் பரிலும் ⋆⋆
மேவெட்டு வன் குண விண்ணோர்களிலும் ⋆
விசயனுக்குத் ⋆
தாவிட்டுலகளந்தான் ⋆
தனை வேறென்று சாற்றினனே ॥ **16** ॥

ஆணை மறாதவர் தேவர் ⋆
அல்லா வழக்கோர் அசுரர் ⋆
கோணை மராத குணச்செல்வ ⋆
நீ குறிக்கொள் மறையைப் ⋆⋆
பேணிய தத்துவமும் ⋆
பிணி அற்ற கிரிசைகளும் ⋆

காண் இதனால் விசயா என்று ⋆
கண்ணன் இயம்பினனே ॥ **17** ॥

மறை பொருந்தாதவை ⋆
வல் அசுரர்க்கு வகுத்தமையும் ⋆
மறை பொருந்தும் நிலையும் ⋆
வண் குணப்படி மூ வகையும் ⋆⋆
மறை நிலை தன்னை வகுக்கும் ⋆
குறி மூன்றின் மேன்மையும் ⋆
அம் மறை உமிழ்ந்தான் உரைத்தான் ⋆
வாசவன் தன் சிறுவனுக்கே ॥ **18** ॥

சத்துவ வீடுடை நற்கருமம் ⋆
தான் உகந்தமையும் ⋆
சத்துவம் உள்ளது ⋆
தான் குறிக்கொள் வகை செய்ததுவும் ⋆⋆
சத்துவ நற்கிரிசைப் பயனும் ⋆
சரணாகதியும் ⋆
சத்துவமே தருவான் உரைத்தான் ⋆
தனிப் பார்த்தனுக்கே ॥ **19** ॥

‡ வன் பற்றறுக்கும் மருந்தென்று ⋆
மாயவன் தான் உரைத்த ⋆
இன்பக்கடல் அமுதாம் என நின்ற ⋆
இக்கீதை தன்னை ⋆⋆
அன்பர்க்குரைப்பவர் கேட்பவர் ⋆
ஆதரித்தோதும் அவர் ⋆

துன்பக் கடலில் துளங்குகை நீங்கித் ⋆
துலங்குவரே ॥ **20** ॥

‡ தீதற்ற நற்குணப் பாற்கடல் ⋆
தாமரைச் செம் மலர்மேல் ⋆
மாதுற்ற மாயன் மருவ ⋆
இன் கீதையின் வண் பொருளைக் ⋆⋆
கோதற்ற நான்மறை மௌலியின் ⋆
ஆசிரியன் குறித்தான் ⋆
காதல் துணிவுடையார் ⋆
கற்கும் வண்ணம் கருத்துடனே ॥ **21** ॥

அடிவரவு — கருமம் உகவை உடலம் சங்கம் பிறவாமை கண்டு யோகம்
தானின்ற ஆராத தன்மேன்மை எல்லை எல்லாம் தன்கழல் ஊனின்படி
முக்குணம் மூவெட்டு ஆணைமறை மறை சத்துவம் வன்பற்று தீதற்ற அருள்

கீதார்த்தசங்கிரகம் முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்